



Signature Not Verified
Signed by: Assistant Director
Location:Namakkal
Date:2022.10.05 17:21:48

மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம்
நாமக்கல் மாவட்டம்
பள்ளிபாளையம் ஊராட்சி ஒன்றியம்

நாமக்கல் மாவட்டம், குமாரபாளையம் வட்டம், காடச்சநல்லூர் ஊராட்சி / கிராமம், சர்வே எண்- 59/6B -ல் அமையும் குடியிருப்பு மனை உட்பிரிவுக்கான தொழில்நுட்ப ஒப்புதல் வரைபடம். (திட்டமில்லாத பகுதி)

| | |
|---|---|
| கோப்பு எண் : NKL / C3SNL03E/ 3424 / 2022<br>இணையதள விண்ணப்பம் எண் : C3SNL03E | அளவு : 1:400 (அ) 1:33'0" |

## குறிப்பு


மனைப்பிரிவின் மொத்தப்பரப்பு....... : 0.31 ¾ ஏக்கர் (அ) 1285.00 ச.மீ

கோரிய மனைகள்....... : 07

ஒதுக்கிய மனைகள்....... : 07

மனைப்பிரிவு எல்லை.......

நிலையில் உள்ள சாலை.......




ஒதுக்கப்பட வேண்டிய பூங்காவிற்கான பரப்பு : (மனைப்பிரிவின் மொத்தப்பரப்பு - மனைப்பிரிவு சாலையின் பரப்பு) x 10%

(1285.00 - 0 ) = 1285.00 ச.மீ x 10% : 128.50 ச.மீ

அரசாணை எண் -18 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள் 04-02-2019-ன் படி 130.00 சதுர மீட்டர் -க்கு பூங்காவிற்கான தொகை அரசு வழிகாட்டி மதிப்பீட்டு தொகையாக செலுத்தப்பட உள்ளது.

## நிபந்தனைகள்:

1. அரசாணை எண் -18 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை (MA-1) நாள; 04-02-2019?ன் படி மனை உட்பிரிவில் அமையும் சாலை, பொது உபயோகம் (ம) பூங்கா ஒதுக்கீட்டினை உள்ளாட்சி தானமாக பெற நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும்.
2. அரசாணை எண் -134 ஊரக வளர்ச்சித்துறை நாள் 16-06-2003-ன் படி நில உரிமம் குறித்து உள்ளாட்சி நிர்வாகம் அதிகாரி முழு திருப்தியில் உள்ளது எனச் சான்றளித்துள்ளதன் பேரில் இம்மனை உட்பிரிவிற்கு தொழில் நுட்ப ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.
3. இம் மனை உட்பிரிவிற்கு உள்ளாட்சி இறுதி ஒப்புதல் அளிக்கும் முன் இடத்தினை எந்தத்துறையாலும் நில ஆர்ஜித நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்றும். எந்தத் துறைக்காகவும் நில ஆர்ஜிதப் பட்டியல் மாவட்ட வருவாய் அலுவலருக்கு அனுப்பப்படவில்லை என்றும், உள்ளாட்சி உறுதி செய்ய வேண்டும்.
4. நில உரிமை குறித்து வழங்கப்பட்ட சான்றுகள் மற்றும் பரிசீலனைக்கு சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள் சரியானவையல்ல என அறியப்பட்டால். மனைப்பிரிவுக்கு தொழில் நுட்ப ஒப்புதல் வழங்கியதில் ஏதேனும் பாதிப்பு ஏற்படக்கூடிய சூழ்நிலை ஏற்படின் இம் மனைப்பிரிவிற்கு வழங்கப்பட்ட தொழில்நுட்ப ஒப்புதல் எவ்வித முன்னறிவிப்புமின்றி நகர் ஊரமைப்பு இயக்குநர்/ஆணையர் அவர்களால் இரத்து செய்யப்படும்.
5. விற்பனைக்குண்டான மனைகளை விற்பனை செய்யும் போது இவ்வாணையின் நகலோடு நகர் ஊரமைப்புத்துறையில் ஒப்புதல் அளிக்கப்பட்ட வரைபடங்களையும் மனை வாங்குபவர்களுக்கு கட்டாயம் வழங்கப்பட வேண்டும்,
6. நகர் ஊரமைப்புத் துறை சட்டப்பூர்வமாக தொழில்நுட்ப அனுமதி அளிப்பதன் மூலம் விண்ணப்பதாரரின் பேரில் உள்ள நில உரிமையை உறுதிப்படுத்தவில்லை, தொழில் நுட்ப அனுமதி-திட்ட அனுமதி அளிப்பதற்கு முன்பு விண்ணப்பதாரரின் விண்ணப்பத்துடன் சமர்ப்பித்த ஆவணங்களில் (கிரையப்பத்திரம், குத்தகை பத்திரம், பட்டா, தானப்பத்திரம், பொது அதிகார பத்திரம் மேலும் பல) விண்ணப்பதாரர் வளர்ச்சி செய்ய உரிமையுள்ளதா என்று மட்டுமே சரிபார்க்கப்படுகிறது, அதன் மூலம் முதற்கட்டமாக விண்ணப்பதாரருக்கு வளர்ச்சி செய்ய உரிமை உள்ளதா என்று பார்க்கப்படுகிறது.
7. ஒப்புதல் அளிக்கப்பட்ட மனை உட்பிரிவு வரைப்படத்தினை எவ்வித மாற்றமும். விடுதலின்றி மனை உட்பிரிவு நுழைவாயிலில; 6' X 4' அளவிலான நிரந்தர தகவல்பலகை மூலம் பொதுமக்கள் பார்வைக்கு நிரந்தரமாக பிரசுரிக்கப்பட வேண்டும்.
8. உத்தேச மனை உட்பிரிவு இடத்தில் நீதிமன்ற வழக்குகள் ஏதேனும் நிலுவையில் இருப்பின் இம்மனைப்பிரிவுவின் அனுமதி செல்லதக்கதல்ல,
9. உத்தேச மனை உட்பிரிவ் ஊடே HT Line , LT Line ஆகியன செல்லுமாயின் அவைகள் சாலையின் போக்கிற்கு ஏற்றவாறு மாற்றியமைக்கப்பட வேண்டும்.
10. உத்தேச மனை உட்பிரிவின் ஊடே நீர் நிலைகள் அமையுமாயின் அதற்கு பாதிப்பு ஏற்படாதவாறு கட்டிடங்கள் கட்டப்பட வேண்டும்.
11. உத்தேச மனை உட்பிரிவு இடத்தில் கட்டிடம் கட்டும் போது உரிய விதிகளை பின்பற்றி உரிய அனுமதி பெற்று கட்டப்பட வேண்டும்.
12. உத்தேச மனை உட்பிரிவு எந்தவித மாற்றம் செய்வதாக இருந்தாலும் இத்துறையின் மூலம் அனுமதி பெறப்பட வேண்டும்.

**APPROVAL No. : SWP / DTCP / NAMAKKAL/ LAYOUT No. : 159 / 2022**

உதவி இயக்குநர்,
மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம்
நாமக்கல்.